# 2016 ஆம் ஆண்டு வடகிழக்கு பருவமழை காலங்களில் தனியார் மருத்துவமனைகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை ஏற்பாடுகள் குறித்து இந்திய மருத்துவ சங்க பிரதிகளுடன் விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அவர்களால் நடத்தப்பட்ட பேரிடர் மீட்பு முன்னேற்பாடுகள் குறித்த ஆய்வு கூட்டத்தின் நடவடிக்கைகள்

ந.க.பே.மே/9830/2016 நாள்: 24.10.2016

**2016 ஆம் ஆண்டு (அக்டோபர் முதல் டிசம்பர் வரை) வடகிழக்கு பருவமழை காலங்களில் பேரிடர் மீட்பு முன்னேற்பாடுகள் மேற்கொள்ளுவது குறித்து இந்திய மருத்துவ சங்க பிரதிநிதிகள் மற்றும் தனியார் மருத்துவ மேலாளர்களுடன் விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையில் 21.10.2016 அன்று பிற்பகல் 05.00 மணியளவில் ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டது. கூட்டத்தின்போது கீழ்க்காணும் அலுவலர்கள் மற்றும் இந்திய மருத்துவ சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.**

**அலுவலர்கள்:**

1. மாவட்ட வருவாய் அலுவலர், விழுப்புரம்.
2. உதவி ஆட்சியர் (பயிற்சி), விழுப்புரம்.
3. மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), விழுப்புரம்.
4. இணை இயக்குநர் (சுகாதாரம்), விழுப்புரம்.
5. துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்), விழுப்புரம்/ கள்ளக்குறிச்சி.
6. நிலைய அலுவலர், தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை, விழுப்புரம்.
7. வட்டாட்சியர் (பேரிடர் மேலாண்மை), விழுப்புரம்.

**இந்திய மருத்துவ சங்க பிரதிநிதிகள்:**

1. திரு.எஸ்.மோகன் ராஜ், மேலாளர், பழனிவேல் மருத்துவமனை, கள்ளக்குறிச்சி.
2. திரு.எல்.மகேந்திரன், பழனிவேல் மருத்துவமனை கள்ளக்குறிச்சி.
3. டாக்டர்.எஸ்.கார்த்திகேயன், K.S.Emergency & Medical Centre, Kallakurichi.
4. டாக்டர்.எம்.பி.செந்தில்ராஜா, **Managing Director, Sri Lakshmi Hospital, Kallakurichi.**

5. டாக்டர்.ஜி.வெங்கடேசன், சக்தி மருத்துவமனை, கள்ளக்குறிச்சி.
6. டாக்டர்.பெர்னார்ட்ராஜ், சுமதி மருத்துவமனை, விழுப்புரம்.
7. G.C. மருத்துவமனை, விழுப்புரம்.
8. டாக்டர்.ஜெ.மோகன், **Managing Director, Lakshmi Hospital.**
9. டாக்டர்.ஜெ.எழிலரசி, மகாலஷ்மி மருத்துவமனை, உளுந்தூர்பேட்டை.
10. டாக்டர்.கே.புகழ்மலை, **Managing Director, Sri Lakshmi Hospital, Kallakurichi.**
11. டாக்டர்.வி.ரமேஷ், Vijay poly Clinic, Kallakurchi.
12. டாக்டர்.ராஜமோகன், கண்ணன் மருத்துவமனை, கள்ளக்குறிச்சி.
13. டாக்டர்.நேரு, I.M.A., Distirct Co-ordinator, விழுப்புரம்.
14. டாக்டர்.திருமாவளவன், I.M.A. - Nursing Home Board Sercretary.
15. டாக்டர்.எம்.பாலதண்டாயுதம், Link Hospital, Viluppuram

விழுப்புரம் மாவட்டத்தில் 2016 வடகிழக்கு பருவமழை காலங்களில் (அக்டோபர் முதல் டிசம்பர் வரை) தனியார் மருத்துவமனைகளில் உள்ள நோயாளிகளின் பாதுகாப்பினை உறுதிசெய்திடும்பொருட்டு மின்இணைப்பு துண்டிப்பு நேரங்களில் மாற்று ஏற்பாடுகள் (Generator - Back up storage) தயார் நிலையில் வைத்திடவும், தரைதளத்தில் மழைநீர் புகும் நேரங்களில் தரைதளத்தில் உள்ள நோயாளிகளை உடனடியாக மீட்டு மேல்தளத்திற்கு மாற்றிட உரிய முன் ஏற்பாடுகள் செய்து தயார் நிலையில் வைத்திடவும், மருத்துவமனைகளில் பணிபுரியும் அலுவலர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கிடவும், மழைக்காலங்களில் அவசர சிகிச்சைக்காக வரும் நோயாளிகளுக்கு உடனடி சிகிச்சை செய்திடும் வகையில் மருத்துவர்களை தயார் நிலையில் இருக்கவும், அவசர சிகிச்சைக்காக மருத்துவ மீட்புக்குழு மற்றும் மருந்துகள் தயார் நிலையில் வைத்திட வேண்டும் எனவும் இந்திய மருத்துவர்கள் சங்கம் பிரதிநிதிகளிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

- உள்நோயாளிகள் உள்ள கட்டிடத்தில் மின்இணைப்பு துண்டிப்பு ஏற்படும் நேரங்களில் மாற்று ஏற்பாடுகள் (Generator - in Elivated based) செய்து தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

- தரைதளத்தில் மழைநீர் புகும் நேரங்களில் தரைதளத்தில் உள்ள நோயாளிகளை உடனடியாக மீட்டு மேல்தளத்திற்கு மாற்றிட உரிய முன் ஏற்பாடுகள் செய்து தயார் நிலையில் வைத்திட வேண்டும்.
- புயல்/மழை/வெள்ளம் ஏற்படும் அவசர காலங்களில் தனியார் மருத்துவமனைகள் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு தேவையான அவசர சிகிச்சை உதவிகளை உடனடியாக அளித்திட வேண்டும்.
- மழைக்காலங்களில் மருந்து கழிவுகள் நீரோட்டம் உள்ள இடத்தில் கொட்டப்படக் கூடாது. உரிய பாதுகாப்பு வழிமுறைகளுடன் வெளியேற்றிடல் வேண்டும்.
- மேற்படி பணிகள் குறித்து தங்களது மருத்துவமனை அலுவலக Non-Medical பணியாளர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கிட கேட்டுக்கொள்ளப்பட்டது.
- இந்திய மருத்துவ சங்க மாதாந்திர ஆய்வுக்கூட்டம் நடத்தும்போது மேற்கூறிய அறிவுரைகளை தெரிவித்து, நடவடிக்கை எடுத்திட கேட்டுக்கொள்ளப்பட்டது.
- மேலும், மழைக்காலங்களில் தினமும் 10 நிமிடங்கள் ஜெனரேட்டர் இயக்கி சோதனை செய்திட கேட்டுக்கொள்ளப்பட்டது.
- இந்திய மருத்துவ சங்க கிளைகள் வாரியாக மருத்துவமனைகள் குறித்த விவரம், மருத்துவர்களின் விவரங்கள் (கைபேசி எண் மற்றும் இ-மெயில் விவரத்துடன்) பட்டியல் அளித்திட கேட்டுக்கொள்ளப்பட்டது. மேற்படி விவரங்கள் விழுப்பரம் மாவட்டஇணையதளத்தில் (Viluppuram.nic.in) பதிவேற்றம் செய்யப்படவுள்ளது.
- மேலும், மழைக்காலங்களில் டெங்கு கொசு அதிகம் பரவ வாய்ப்புள்ளதால், தங்களது மருத்துவமனையில் போதிய விழிப்புணர்வு ஏற்படுத்திட கேட்டுக்கொள்ளப்பட்டது.

ஒம்/-இல.சுப்பிரமணியன்
மாவட்ட ஆட்சியர்,
விழுப்புரம்.

பெறுநர்
சம்பந்தப்பட்ட அலுவலர்கள்/ இந்திய மருத்துவ சங்க பிரதிநிதிகள்

நகல்: முதன்மை செயலர்/ வருவாய் நிர்வாக ஆணையர் , பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் துறை, சேப்பாக்கம், சென்னை அவர்களுக்கு தகவலுக்காகப் பணிந்து அனுப்பப்படுகிறது.

நகல்: மாவட்ட ஆட்சியர்/மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் நேர்முக எழுத்தர்கள்

**2016 ஆம் ஆண்டு வடகிழக்கு பருவமழை காலங்களில் மீட்பு பணிகளுக்காக விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து தன்னார்வு தொண்டு நிறுவனங்கள் மூலம் தன்னார்வு தொண்டர்கள் (Volunteers) சேவை செய்திட தகுந்த அறிவுரைகள் மற்றும் மீட்பு பணிக்கான பயிற்சிகள் வழங்குதல் குறித்து விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அவர்களால் நடத்தப்பட்ட மாவட்ட மீட்புக்குழு ஒருங்கிணைப்பு கூட்டத்தின் நடவடிக்கைகள்**

ந.க.பே.மே/9830/2016 நாள்: 24.10.2016

**2016 ஆம் ஆண்டு (அக்டோபர் முதல் டிசம்பர் வரை) வடகிழக்கு பருவமழை காலங்களில் மீட்பு பணிகளுக்காக தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் மூலம் தன்னார்வு தொண்டர்கள் சேகரித்தல் மற்றும் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய அறிவுரைகள் மற்றும் பயிற்சிகள் குறித்து விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையில் 21.10.2016 அன்று பிற்பகல் 04.00 மணியளவில் மாவட்ட மீட்புக்குழு ஒருங்கிணைப்பு கூட்டம் நடத்தப்பட்டது. கூட்டத்தின்போது கீழ்க்காணும் அலுவலர்கள் மற்றும் தன்னார்வு தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.**

**அலுவலர்கள்:**

1. மாவட்ட வருவாய் அலுவலர், விழுப்புரம்.
2. உதவி ஆட்சியர் (பயிற்சி), விழுப்புரம்.
3. மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), விழுப்புரம்.
4. இணை இயக்குநர் (சுகாதாரம்), விழுப்புரம்.
5. துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்), விழுப்புரம்/ கள்ளக்குறிச்சி.
6. நிலைய அலுவலர், தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை, விழுப்புரம்.
7. மாவட்ட விளையாட்டு அலுவலர், விழுப்புரம்.
8. வட்டாட்சியர் (பேரிடர் மேலாண்மை), விழுப்புரம்.

**தன்னார்வு தொண்டு நிறுவனங்கள் பிரதிநிதிகள்:**

1. திரு.டி.அசீர் தேவகுமார், பயிற்சி மேலாளர்.
2. திரு.எம்.ராதாகிருஷ்ணன், செயலர், SRMS Trust.

3. திருமதி.பி.லதா, வட்டார ஒருங்கிணைப்பாளர், CBDRM.
4. திருமதி.உமாபார்வதி, V.C.F., CBDRM
5. திருமதி.கவிதா, V.C.F., CBDRM
6. திரு.எஸ்.ஞானமூர்த்தி, BRGF., Trainer.
7. திருமதி.எஸ்.நதியா, CBDRM., Resource Person
8. திரு.பி.மைக்கேல் பாரதி, CBDRM., Resource Person
9. திரு.ஆர்.கோடீஸ்வரன்,ஆலோசகர்,**Association for Rural Mass India,Viluppuram.**
10. திரு.கே.ஆர்.சேஷாத்திரி, Nehru Yuva Kendra, Govt of India, Viluppuram
11. திரு.ஏ.மார்டின் மங்கேய ராஜ், CBDRM, Resource Person
12. திரு.கே.வாசுதேவன், CBDRM., District Programme Officer,
13. கேப்டன்.வி.சுந்தரவடிவேலு, Associate Professor, NCC Officer, GAC, Tvm
14. திரு.பி.வேல்முருகன், District Liason Officer, NSS, Viluppuram-I
15. திரு.எச்.அண்ணாதுரை, District Liaison Officer – NSS, Viluppuram –II
16. கேப்டன்.சி.விஜயன், **Associate Professor of Economics,NCC Officer,AAGAC, Viluppuram**
17. திரு.டி.பாலு,**NSS Programme Officer,Dr.R.K.ShanmugamCollege,Indili, Kallakurichi.**
18. திரு.வி.ஆனந்தராஜ், மேலாளர், PMD-NGO-Mangalapuram, Kakkanur, Kedar.
19. Chairman, IRCS, Viluppuram.
20. திரு.வு.மு.பத்மநாபன், Vice-Chairman, IRCS, Viluupuram
21. திருமதி.எம்.அமுதவள்ளி, CBDRM, பயிற்சியாளர்,
22. திரு.எம்.மணிவேலன், CBDRM
23. திரு.எம்.பாபு செல்வதுரை, JRC – Convener, Viluppuram
24. திரு.டி.மாயக்கண்ணன், JRC-Convener – Kallakurichi
25. திரு.பி.பாலசுப்பிரமணிய பாரதி, JRC-Convener, Tindicaanm
26. திரு.பி.கணேசன், B.F.T., CBDRM
27. திரு.ஏ.ஜெரால்டு மோரிஸ், திட்ட இயக்குநர், AVAG, Auroville.
28. திரு.எஸ்.சின்னப்பன், இயக்குநர், கல்விகேந்திரா.
29. திரு.சி.ராமு, TRG-Co-ordinator, Kalvi Kendra.

மாவட்ட மீட்புக்குழு ஒருங்கிணைப்பு கூட்டத்தில் 2016 வடகிழக்கு பருவமழையின் போது ஏற்படக்கூடிய புயல்/மழை/வெள்ளம் ஆகியவற்றின் தாக்கத்தினால் பொதுமக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள 13 வட்டங்களுக்கும் வட்டவாரியாக மண்டல அலுவலர்கள் (Zonal Officers) நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேற்படி மண்டல அலுவலர்களின் குழு உறுப்பினர்கள் விழுப்புரம் மாவட்டம் முழுவதும் கடந்த ஆண்டுகளில் ஏற்பட்ட புயல்/மழை/ வெள்ள பாதிப்புகளின் அடிப்படையில் 166 கிராமங்கள் Vulnerable கிராமங்களாக தேர்வு செய்யப்பட்டு, அப்பகுதிகளில் உள்ள ஏரிகள், குளங்கள்,கண்மாய்கள், ஆறுகள் உள்ளிட்ட அனைத்து நீர்நிலை புறம்போக்குகளையும், தாழ்வான குடியிருப்பு பகுதிகள், நீர்நிலைகளை ஒட்டியுள்ள குடியிருப்புகள், கடற்கரை தாழ்வார பகுதிகளில் உள்ள குடியிருப்புகள் போன்ற பாதிப்புக்குள்ளாக நேரிடும் பகுதிகள் அனைத்தையும் நேரடி ஆய்வு மேற்கொண்டு, எதிர்கொள்ளவிருக்கும் 2016 ஆம் ஆண்டு வடகிழக்கு பருவமழைக்கு முன்னெச்சரிக்கை ஏற்பாடுகள் செய்து, பழுதடைந்த நிலையில் உள்ள நீர்நிலைகள், சாலைகள், சிறுபாலங்கள், தரைபாலங்கள், மதகுகள், கலங்கங்கள், கரைகள் பலப்படுத்துதல் போன்றவற்றினை சீரமைத்தும், அவசர காலங்களில் தேவைப்படும் அனைத்து உபகரணங்கள், மருத்துவ ஏற்பாடுகள் அனைத்தும் தயார் நிலையில் வைத்திருக்க மண்டல அலுவலர்களுடன் நடத்தப்பட்ட மாவட்ட ஒருங்கிணைப்பு ஆய்வு கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டு, அதன்படி முன்னெச்சரிக்கை நடவடிக்கை ஏற்பாடுகள் நடைபெற்று வருகிறது.

இந்நேர்வில் மேற்படி பருவமழை காலங்களில் ஏற்படும் புயல்/மழை/வெள்ளம் பாதிப்பிலிருந்து மீட்பு பணிகளுக்காக மீட்புக்குழுக்கள் அமைக்கும்பொருட்டு, மாவட்டம் முழுவதும் உள்ள தன்னார்வு தொண்டு நிறுவனங்கள் வாயிலாக மீட்பு பணியாளர்களின் விவரப்பட்டியல் அளித்திட கோரப்பட்டது.

மேற்படி மீட்பு குழு பணியாளர்களின் பெயர், விலாசம், கைபேசி எண் உள்ளிட்ட அனைத்து விவரங்களும் கடலோர பாதுகாப்பு மாவட்ட திட்ட அலுவலர் அவர்கள் பெற்று, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களிடம் கொடுத்துக்கொள்ள கேட்டுக்கொள்ளப்பட்டது. மேற்படி மீட்புக்குழு பணியாளர்களின்

விவரங்கள் அனைத்தும், விழுப்புரம் மாவட்டத்தில் இயற்கை இடர்பாடுகள் கட்டுப்பாட்டு அலுவலக இணையதளத்தில் (Portal) பதிவேற்றம் செய்யப்படவுள்ளது. மேற்படி பதிவேற்றங்கள் துறைவாரியாக மேற்கொள்ளப்படவுள்ளது என தெரிவிக்கப்பட்டது.

மாவட்டம் முழுவதும் ஒருங்கிணைக்கும் மீட்புக்குழு பணியாளர்களை 5 குழுக்களாக பிரித்து, ஒரு குழுவிற்கு 5 உறுப்பினர்கள் என்ற முறையில் 5 வெவ்வேறான பணிகளுக்கான (விரைவு எச்சரிக்கை குழு, தங்குமிடம் ஏற்பாட்டு குழு, முதலுதவி குழு உள்ளிட்ட) பயிற்சிகள் கடலோர பாதுகாப்பு குழுவினரால் கொடுக்கப்படவுள்ளதாக கடலோர பாதுகாப்பு மாவட்ட திட்ட மேலாளர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி மீட்புக்குழு பணிகளுக்கான மீட்பு பணியாளர்களின் விவரங்களை (முழு அளவில்) அனைத்து தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் 22.10.2016-க்குள் கொடுக்க வேண்டும்.

அவசரக்கால மருத்துவ உதவிகள் மேற்கொள்ள மேற்படி மீட்புக்குழுவினர்களுக்கு முதலுதவி பயிற்சிகள், இருதயம் மற்றும் நுரையீரல் செயலாக்கம் குறித்த பயிற்சிகள் உள்ளிட்ட Triage (Green, Yellow, Red) என்ற முறையில் பயிற்சிகள் வழங்கப்படும் என விழுப்புரம், சுகாதாரப்பணிகள், துணை இயக்குநரால் தெரிவிக்கப்பட்டது.

மேலும், அவசர ஊர்தி 108 மட்டுமில்லாமல் ஒரு வட்டாரத்திற்கு 1 மருத்துவக்குழு (மருத்துவர், மருந்துகள், செவிலியர்கள்) ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி மருத்துவ குழுவினர் வட்டார மருத்துவ அலுவலரின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் எனவும் அவசரகாலத்தில் மருத்துவ உதவிக்கு சம்பந்தப்பட்ட வட்டார மருத்துவ அலுவலரை தொடர்பு கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

இயற்கை இடர்பாடுகளிலிருந்து பாதுகாத்து, விடுவித்துக்கொள்ள ஏதுவாக தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் மீட்புக்குழுக்கள் மூலம் விழிப்புணர்வு கூட்டம் பொதுமக்களிடையே நடத்தப்பட்டு வருகிறது எனவும், புயல்/ வெள்ளம்

எச்சரிக்கை விடுக்க சைரன் சவுண்டு மற்றும் ஒலிபெருக்கிகள் தயார் நிலையில் உள்ளது எனவும் கடலோர பாதுகாப்பு மாவட்ட திட்ட அலுவலரால் தெரிவிக்கப்பட்டது.

**<u>பொது:</u>**

வடகிழக்கு பருவமழை காலங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய மீட்புக்குழுவினர்கள் ஈடுபாட்டுடன் செயல்பட வேண்டும் எனவும், வட்டங்களில் கல்லூரியில் பயிலும் நாட்டு நலப்பணித் திட்ட (**NSS**) மாணவர்களை தேர்வு செய்து, அவர்களுக்கு உரிய பயிற்சிகள் வழங்கிடவும் ஆய்வுக் கூட்டத்தின் போது கேட்டுக் கொள்ளப்பட்டது.

ஒம்/-இல.சுப்பிரமணியன்
மாவட்ட ஆட்சியர்,
விழுப்புரம்.

பெறுநர்
சம்பந்தப்பட்ட அலுவலர்கள்/ தன்னார்வ தொண்டு நிறுவன பிரதிநிதிகள்

நகல்: முதன்மை செயலர்/ வருவாய் நிர்வாக ஆணையர் , பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் துறை, சேப்பாக்கம், சென்னை அவர்களுக்கு தகவலுக்காகப் பணிந்து அனுப்பப்படுகிறது.

நகல்: மாவட்ட ஆட்சியர்/மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் நேர்முக எழுத்தர்கள்

**வடகிழக்கு பருவமழை 2016 தொடர்பாக முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்வது குறித்து விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அவர்களால் நடத்தப்பட்ட மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் நடவடிக்கைகள்**

ந.க.பே.மே/9830/2016 நாள்: 24.10.2016

**விழுப்புரம் மாவட்டத்தில் எதிர்வரும் 2016 வடகிழக்கு பருவமழை தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையில் 20.10.2016 அன்று முற்பகல் 10.00 மணியளவில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடத்தப்பட்டது. கூட்டத்தின்போது கீழ்க்காணும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.**

1.மாவட்ட வருவாய் அலுவலர், விழுப்புரம்.

2.சார் ஆட்சியர், திண்டிவனம்.

3.மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), விழுப்புரம்.

4.வருவாய் கோட்டாட்சியர், விழுப்புரம்/கள்ளக்குறிச்சி/ திருக்கோவிலூர்.

5.உதவி ஆணையர் (கலால்), விழுப்புரம்.

6.தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி), விழுப்புரம்.

7.மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர், விழுப்புரம்.

8. தனித்துணை ஆட்சியர் (சிப்காட்), திண்டிவனம்.
9. உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), விழுப்புரம்/ கள்ளக்குறிச்சி.
10. துணை இயக்குநர் (சுகாதாரம்), கள்ளக்குறிச்சி/ விழுப்புரம்.
11. வேளாண்மை அலுவலர், திருநாவலூர்/ உளுந்தூர்பேட்டை/ ரிஷிவந்தியம்/ மணலூர்பேட்டை/ முகையூர்/ சங்கராபுரம்/ வளத்தி/ மேல்மலையனூர்/ கோலியனூர்/ மணம்பூண்டி/ வல்லம்/ வானூர்/ கண்டமங்கலம்/ செஞ்சி/
12. நகராட்சி ஆணையாளர், விழுப்புரம்/ கள்ளக்குறிச்சி/திண்டிவனம்.
13. அனைத்து வருவாய் வட்டாட்சியர்கள், விழுப்புரம் மாவட்டம்.

14. அனைத்து குறுவட்ட வருவாய் ஆய்வாளர்கள், விழுப்புரம் மாவட்டம்.
15. உதவி செயற்பொறியாளர், தமிழ்நாடு மின்சாரவாரியம், விழுப்புரம்/ உளுந்தூர்பேட்டை.
16. வட்டாட்சியர் (பேரிடர் மேலாண்மை), விழுப்புரம்.
17. நிலைய அலுவலர், தீயணைப்பு மற்றும் மீட்பு துறை, விழுப்புரம்.
18. கால்நடை உதவி மருத்துவர், காட்டுப்பையூர்/ சிறுவத்தூர்/ நத்தாமூர்/ திம்மலை/ வாணாபுரம்/ சின்னசேலம்/ கள்ளக்குறிச்சி/ எஸ்.ஒகையூர்/ மணலூர்பேட்டை/ இந்திலி/ திருக்கோயிலூர்/ அரகண்டநல்லூர்/ கெங்கராம்பாளையம்/ திருவெண்ணெய்நல்லூர்/ கள்ளப்புலியூர்/ வானூர்/ கண்டமானடி/ கண்டமங்கலம்.
19. சுகாதார ஆய்வாளர், திருவெண்ணெய்நல்லூர்/ திருக்கோயிலூர்/ அரகண்டநல்லூர்/ மணலூர்பேட்டை/ மேல்சித்தாமூர்/ திண்டிவனம்/
20. உதவி பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு, சின்னசேலம்/ மூங்கில்துறைப்பட்டு/ சங்கராபுரம்/ உளுந்தூர்பேட்டை/ கள்ளக்குறிச்சி/ விழுப்புரம்-2/ திருக்கோயிலூர்/ திண்டிவனம்/ வானூர்/ மரக்காணம்/ வீடுர்/ செஞ்சி/ வளவனூர்.
21. உதவி பொறியாளர், நீர்ப்பாசன பிரிவு, சங்கராபுரம்/ சின்னசேலம்/ திருக்கோயிலூர்.
22. உதவி தோட்டக்கலை அலுவலர், சங்கராபுரம்/ கண்டமங்கலம்.
23. தனி வட்டாட்சியர் (கு.பொ.), கள்ளக்குறிச்சி/ விழுப்புரம்.
24. கோட்ட கலால் அலுவலர், கள்ளக்குறிச்சி./ விழுப்புரம்.
25. தனி வட்டாட்சியர் (ஆதிந), கள்ளக்குறிச்சி/ விழுப்புரம்
26. தனி வட்டாட்சியர் (ச.பா.தி), உளுந்தூர்பேட்டை/ திருக்கோயிலூர்/ கள்ளக்குறிச்சி/ மரக்காணம்/ திண்டிவனம்.
27. தனி வட்டாட்சியர், (நகர நிலவரி திட்டம்), விழுப்புரம்/ திண்டிவனம்.
28. தனி வட்டாட்சியர் (முத்திரைத் தாள்), திண்டிவனம்.
29. வட்ட வழங்கல் அலுவலர்/ திருக்கோயிலூர்/ மரக்காணம்/ வானூர்.
30. உதவி மின் பொறியாளர், மின்சார வாரியம், திருக்கோயிலூர்/ வீரப்பாண்டி/ கண்டாச்சிபுரம்/ விழுப்புரம்/ பாக்கம்/ நல்லான்பிள்ளைபெற்றாள்/ செஞ்சி/ தேவனூர்/ ஒலக்கூர்/ ஐக்காம்பேட்டை/ மரக்காணம்.
31. உதவி பொறியாளர்,TANGEDCO, தாயனூர்/ அவலூர்பேட்டை.

32. செயல் அலுவலர், பேரூராட்சிகள், சின்னசேலம்/ வடக்கநந்தல்/ தியாகதுருகம்/ சங்கராபுரம்/ மரக்காணம்/ மணலூர்பேட்டை/ உளுந்தூர்பேட்டை/ தியாகதுருகம்/ செஞ்சி/ திருவெண்ணெய்நல்லூர்/ வடக்கனந்தல்/ கோட்டக்குப்பம்/ வளவனூர்/ அரகண்டநல்லூர்/ விக்கிரவாண்டி.
33. உதவி பொறியாளர், தேசிய நெடுஞ்சாலை, திண்டிவனம்.
34. உதவி பொறியாளர், நெடுஞ்சாலைத் துறை, சங்கராபுரம்/ உளுந்தூர்பேட்டை/ திண்டிவனம்.
35. மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர், தியாகதுருகம்/ செஞ்சி/ வல்லம்/ கல்வராயன்மலை/ வல்லம்.
36. வட்டார சுகாதார கண்காணிப்பாளர், அரசு சுகாதார மையம், சத்தியமங்கலம்.
37. தோட்டக்கலை அலுவலர், கண்டமங்கலம்/ மேல்மலையனூர்/ காணை.
38. மருத்துவ அலுவலர்/ மேல்மலையனூர்/ வளத்தி.
39. மண்டல துணை வட்டாட்சியர், உளுந்தூர்பேட்டை/ திருக்கோயிலூர்/ மேல்மலையனூர்/ மரக்காணம்/ திண்டிவனம்/ விக்கிரவாண்டி.
40. வட்டார வளர்ச்சி அலுவலர், திண்டிவனம்/ திருநாவலூர்/ உளுந்தூர்பேட்டை/ திருவெண்ணெய்நல்லூர்/ காணை/ மேல்மலையனூர்/ வானூர்/ கோலியனூர்.
41. காவல் ஆய்வாளர், விழுப்புரம்/ திண்டிவனம்/ கள்ளக்குறிச்சி.
42. துணை ஆய்வாளர், மீன்வளத்துறை,கோட்டக்குப்பம்/ மரக்காணம்/ விழுப்புரம்.
43. வட்ட சார் ஆய்வாளர், மரக்காணம்.
44. சாலை ஆய்வாளர்கள், நெடுஞ்சாலைத் துறை, விழுப்புரம்.

மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் 2016 வடகிழக்கு பருவமழையின் போது ஏற்படக்கூடிய புயல்/மழை/வெள்ளம் ஆகியவற்றின் தாக்கத்தினால் பொதுமக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள 13 வட்டங்களுக்கும் வட்டவாரியாக மண்டல அலுவலர்கள் (Zonal Officers) நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேற்படி மண்டல அலுவலர்களின் குழு உறுப்பினர்கள் அந்தந்த வட்டங்களில் உள்ள ஏரிகள், குளங்கள்,கண்மாய்கள், ஆறுகள் உள்ளிட்ட அனைத்து நீர்நிலை புறம்போக்குகளையும், தாழ்வான குடியிருப்பு பகுதிகள், நீர்நிலைகளை ஒட்டியுள்ள குடியிருப்புகள், கடற்கரை தாழ்வார பகுதிகளில் உள்ள குடியிருப்புகள்

போன்ற பாதிப்புக்குள்ளாக நேரிடும் பகுதிகளையும், கடந்த 2015 ஆம் ஆண்டு ஏற்பட்ட மழை/வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகள் அனைத்தையும் நேரடி ஆய்வு மேற்கொண்டு, எதிர்கொள்ளவிருக்கும் 2016 ஆம் ஆண்டு வடகிழக்கு பருவமழைக்கு முன்னெச்சரிக்கை ஏற்பாடுகள் செய்து, பழுதடைந்த நிலையில் உள்ள நீர்நிலைகள், சாலைகள், சிறுபாலங்கள், தரைபாலங்கள், மதகுகள், கலங்கங்கள், கரைகள் பலப்படுத்துதல் போன்றவற்றினை சீரமைத்தும்,அவசர காலங்களில் தேவைப்படும் அனைத்து உபகரணங்கள், மருத்துவ ஏற்பாடுகள் அனைத்தும் தயார் நிலையில் வைத்திருக்கவும் அறிவுறுத்தப்பட்டது.

மண்டல அலுவலர்கள் அவரவர்களது தனிக்குழு உறுப்பினர்களைக் கொண்டு தங்களது மண்டலத்தில் கடந்த ஆண்டு வடகிழக்கு பருவமழையில் ஏற்பட்ட மழை/வெள்ளத்தில் அதிகளவு பாதிப்படைந்த பகுதிகளை Highly Vulnerable, Moderately Vulnerable, Low Vulnerable என்ற விகிதாச்சார அடிப்படையில் கண்டறிந்து பட்டியலிடப்பட்டு, அப்பகுதிகளை நேரிடையாக கள ஆய்வு மேற்கொண்டு, தாழ்வான பகுதிகள், ஊரகப் பகுதிகளில் பாதிப்புக்குள்ளாகும் ஏரிகள், மதகுகள், தேசிய நெடுஞ்சாலை மற்றும் மாநில நெடுஞ்சாலையினை ஒட்டியுள்ள ஏரிகள், கால்வாய்கள், பாலங்கள், மேம்பாலங்கள், பழுதடைந்த மின்கம்பங்கள், சாலைகள் ஆகியவை குறித்த தற்போதைய நிலையினையும், அதனை சீரமைக்க வேண்டிய பணிகள் மற்றும் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து கருத்துருவினையும் ஆய்வின்போது அனைத்து மண்டல அலுவலர்களால் வட்டார வாரியாக தெரிவிக்கப்பட்டது.

## <u>செஞ்சி வட்டம்</u>

- கிருஷ்ணாபுரம் கிராமம், சிறுகடம்பூர் ஏரியினை ஆக்கிரமிப்பு செய்து 30 குடும்பங்கள் வீடுகட்டி குடியிருந்து வருகின்றனர். அவர்களை உடனடியாக அகற்றம் செய்திட வேண்டும்.
- வீரணாமூர் கிராமம், ஏரி புறம்போக்கில் வீடு கட்டி குடியிருந்து வருகின்றனர். அப்பகுதியில் தண்ணீர் தேக்கம் உள்ள பகுதி என்பதால்

மழை காலங்களில் நீர்த்தேக்கம் ஏற்பட்டு, பொதுமக்கள் பாதிப்பிற்குள்ளாகும் நிலை ஏற்பட வாய்ப்புள்ளது. ஆகையால் அப்பகுதியில் உள்ள மக்களுக்கு மாற்று இடம் வழங்கி, ஆக்கிரமிப்பினை அகற்றம் செய்திட வேண்டும் எனவும் மாற்று இடம் வழங்கிட இடம் தேர்வு செய்து, அதற்கான முன்மொழிவினை அனுப்பிட அறிவுறுத்தப்பட்டது.

**விழுப்புரம் வட்டம்**

- விழுப்புரம் மண்டலத்தில் 28 Low Vulnerable பகுதிகளை கண்டறியப்பட்டு, அப்பகுதிகளில் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து 17.10.2016 அன்று ஆய்வுக்கூட்டம் நடத்தப்பட்டது எனவும், தற்போது அப்பகுதிகளில் உள்ள அவசரமாக சீர்செய்ய வேண்டிய பகுதிகள் சீரமைக்கப்பட்டு, முடிக்கப்பட்டது எனவும், தற்போது விழுப்புரம் புதிய பேருந்து நிலையம் வாய்க்கால் தூர்வாரி அகலப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது எனவும் விழுப்புரம், வருவாய் கோட்டாட்சியரால் ஆய்வின்போது தெரிவிக்கப்பட்டது.
- மேற்படி பணியினை வருவாய் கோட்டாட்சியர் மற்றும் நகராட்சி ஆணையர் நாள்தோறும் நேரடி ஆய்வு செய்து, கண்காணித்திட வேண்டும் எனவும், மேற்படி வாய்கால் கோலியனூர் வாய்க்கால் வழியாக செல்லும் வகையில் வாய்க்கால் வழியினை தூர்வாரி சரிசெய்திட வேண்டும் எனவும், மழைக்காலங்களில் எவ்வித பிரச்சினையும் பயணிகளுக்கு ஏற்படாத வண்ணம் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் எனவும், பேருந்து நிலையத்தில் மழைக்காலத்தின்போது மழை நீர் தேங்காவண்ணம் சரிசெய்திடவும், அவ்வாறு தேங்கும் நீரினை உடனுக்குடன் வெளியேற்றிட 2 மோட்டார் பம்புகளை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டது.
- மேற்படி பணிகளை தினசரி ஆய்வு செய்து, முடிவான அறிக்கையினை புகைப்பட ஆதாரத்துடன் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களிடம் ஒப்படைத்திட அறிவுறுத்தப்பட்டது.
- ஊரணித்தாங்கல் ஏரியின் அருகில் உள்ள சாலையில் கடந்த பருவமழையின்போது ஏற்பட்ட வெள்ள பெருக்கில் சாலையின்மீது

வெள்ளபெருக்கு ஏற்பட்டது என்பதால் உடனடியாக அப்பகுதியில் உள்ள ஆக்கிரமிப்பினை அகற்றி, ஏரியினை தூர்வாரி சீர்செய்திட வேண்டும்.

- காணை கிராமத்தில் தகுந்த முன்னெச்சரிக்கை ஏற்பாடுகள் வேண்டும் எனவும், அதற்கான அறிக்கையினை 2 நாட்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது. மேற்படி முடிவு செய்யப்பட்ட பணிகளை மண்டல அலுவலர்கள் குழுவுடன் சேர்ந்து ஆய்வு செய்திட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டது.

<u>திண்டிவனம் வட்டம்</u>

- திண்டிவனம் வட்டத்தில் 4 வட்டாரங்கள் உள்ளது எனவும்,19.10.2016 அன்று மழைக்காலங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை ஏற்பாடுகள் குறித்து ஆய்வுக்கூட்டம் நடத்தப்பட்டது எனவும் திண்டிவனம், சார் ஆட்சியரால் தெரிவிக்கப்பட்டது.
- **ஒலக்கூர் வட்டாரம்:** கூச்சிகுளத்தூர் கிராமத்தில் கடந்த ஆண்டு வெள்ள பெருக்கில் சாலையின்மீது நீரோட்டம் ஏற்பட்டது எனவம், தற்போது அப்பகுதியில் மேம்பாலம் கட்டப்பட்டுள்ளது எனவும், அதேபோல், கடவம்பாக்கம் கிராமத்திலும் மேம்பாலம் கட்டப்பட்டுள்ளது எனவும் கூட்டத்தின் போது தெரிவிக்கப்பட்டது.
- சாத்தனூர் கிராமத்தில் சித்தேரிப்பட்டு ஏரியின் கலிங்கல் அடைப்பு உள்ளது. அதனை சரிசெய்திடல் வேண்டும்.
- சாரம் கிராமத்தில் குளத்தில் சிறிய பைப் மட்டுமே போடப்பட்டுள்ளது. அதனை மாற்றி பெரிய அளவிலான பைப் போட வேண்டும்
- கீழ்ஆதனூர் கிராம ஏரியில் உள்ள ஓடையினை சரிசெய்திடல் வேண்டும்.
- சேந்தமங்கலம் கிராமத்தில் உள்ள வாய்க்கால் மூடப்பட்டுள்ளது. அதனை தூர்வாரி வாய்க்காலினை அகலப்படுத்த வேண்டும்.
- பனையூர், பாங்குளத்தூர் கிராமங்களில் ஓடை தூர்வாரப்படல் வேண்டும். அருகில் தொகுப்பு வீடுகள் உள்ளதால் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.
- ஆச்சிப்பாக்கம் கிராமத்தில் கடந்த வருடம் ஓடையில் இருந்து வெளியேறிய உபரி நீர் அருகில் உள்ள கிராம பகுதிகளில் சென்றதால் பாதிப்பு ஏற்பட்டது. கரைகளை பலப்படுத்தப்பட வேண்டும்.

- கீழ்மண்ணூர் கிராமத்தில் உள்ள வாய்க்காலில் அடைப்பு உள்ளது. அதனை ஆழப்படுத்த வேண்டும்.
- கடவம்பாக்கம் கிராமத்தில் உள்ள தரைபாலம் அருகில் ஓடை உள்ளது. கடந்த வருடம் ஏற்பட்ட வெள்ளத்தில் தரைபாலம் பழுதடைந்து, அருகில் உள்ள குடிசை வீடுகளும் பாதிக்கப்பட்டது. அதனை சீரமைக்கப்பட வேண்டும்.
- ஒலக்கூர் வட்டார வளர்ச்சி அலுவலர் மேற்கண்ட பணிகள் அனைத்தையும் 4 நாட்களுக்குள் முடித்து முடிவான அறிக்கையினை தகுந்த புகைப்படத்துடன் சமர்பிக்கப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டது.
- **மரக்காணம் வட்டாரம்:** மரக்காணம் வட்டத்தில் உள்ள அனைத்து Vulnerable பகுதிகளையும் நியமனம் செய்யப்பட்டுள்ள மண்டல குழு உறுப்பினர்கள் நேரில் ஆய்வு செய்து அறிக்கையினை அளித்திட அறிவுறுத்தப்பட்டது.
- மரக்காணம் வட்டத்தில் 6 ஏரிகள் உள்ளது எனவும், வாய்க்கால் அனைத்தும் தூர் வாரும் பணி தொடங்கவுள்ளதாகவும் வட்டாட்சியரால் கூட்டத்தின் போது தெரிவிக்கப்பட்டது.
- மின்வாரியத் துறையினரிடமிருந்து மின்கம்பிகள் மற்றும் மின்கம்பங்கள் நிலை குறித்த விவரப்பட்டியல் பெற்றிடவும், மேற்படி பழுதடைந்த நிலையில் உள்ள மின்கம்பிகள் மற்றும் மின்கம்பங்களை மாற்றி, அதற்ான அறிக்கையினை கொடுத்துக்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டது.
- இதுவரை 175 மின்கம்பங்கள் மாற்றப்பட்டுள்ளது என மின்வாரிய பொறியாளரால் ஆய்வின்போது தெரிவிக்கப்பட்டது. மேலும், மின்கம்பங்களுக்கு அருகில் உள்ள மரங்களை அகற்றிடவும் அறிவுறுத்தப்பட்டது.
- **மயிலம் வட்டாரம்:** பாதிராப்புலியூர் கிராமத்தில் கடந்த ஆண்டு ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் பயிர் சேதாரம் அதிக அளவில் ஏற்பட்டுள்ளது. அதற்கு முன்னேற்பாடுகள் செய்திட வேண்டும்.
- பெரமண்டூர், இளமங்கலம் கிராமங்களில் அரசு புறம்போக்கு நீர்நிலை பகுதிகளில் வசித்துவரும் குடுகுடுப்புகாரர்களுக்கு மாற்று இடம் தேர்வு

செய்து, அவர்களுக்கு நிலஒப்படை வழங்கி, ஊரக வளர்ச்சி துறையினர் மூலம் I.A.Y. திட்டத்தின்கீழ் வீடுகட்டி தர உரிய ஏற்பாடுகள் செய்திடவும், அப்பகுதிகளில் உள்ள ஆக்கிரமிப்பினை அகற்றிடவும் அறிவுறுத்தப்பட்டது.

- திண்டிவனம் வட்டாரம்: திண்டிவனம் வட்டம், வார்டு-1-ல் உள்ள வாய்க்கால் புறம்போக்கில் ஆக்கிரமிப்பு செய்து பெட்ரோல் பங்க் வைக்கப்பட்டுள்ளது. மேற்படி ஆக்கிரமிப்பினை அகற்றி, வாய்க்காலினை தூர்வாரிட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.
- திண்டிவனம் பேருந்து நிலையத்தின் அருகில் உள்ள வாய்க்காலில் குப்பைகளை கொட்டி, வாய்க்கால் அடைப்பு ஏற்பட்டு உள்ளது. அதனை தூர்வாரி, அகலப்படுத்தப்பட வேண்டும்.
- திண்டிவனம் வட்டாரத்தில் கடந்த ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மண்டல குழு உறுப்பினர்கள் நேரில் ஆய்வு செய்து, முன்னேற்பாடுகள் பணிகளை விரைந்து மேற்கொண்டு, அறிக்கையினை புகைப்படத்துடன் சமர்ப்பித்திட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டது.

**<u>விக்கிரவாண்டி வட்டம்</u>**

- விக்கிரவாண்டி பேருந்து நிலையத்தில் சிறிதளவு மழைக்கே மழைநீர் தேங்குகிறது. அங்கு ஜல்லி மற்றும் சிமெண்ட் கலந்த கலவை மூலம் மணல் கொட்டி சரிசெய்திட வேண்டும்.
- தென்பேர் கிராமத்தில் வாய்க்கால் குறுகி உள்ளது. அதனை ஆழப்படுத்தி, அகலப்படுத்தப்பட வேண்டும்.
- திருக்குணம் கிராமத்தில் உள்ள வாய்க்காலில் முட்புதர் உள்ளதை அகற்றிட வேண்டும்.

**<u>மரக்காணம் வட்டம்</u>**

- கூனிமேடு கிராம பள்ளியின் அருகில் உள்ள புயல் பாதுகாப்பு மையம் பராமரிக்கப்பட வேண்டும். சாலையின் ஓரங்கள் பழுதடைந்து உள்ளதை சரிசெய்திட வேண்டும்.

- கூனிமேடு நெடுஞ்சாலை தானே புயலின்போது அதிகளவு பாதிப்பு ஏற்பட்டதால் 1.5 கி.மீ. தொலைவில் நீர்த்தேங்குகிறது. மேற்படி இடத்தினை நெடுஞ்சாலை பொறியாளர் உடனடியாக நேரில் ஆய்வு செய்து சரிசெய்திட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டது.
- நாகல்பாக்கம், இராயநல்லூர் கிராமங்களில் உள்ள ஆற்றின் கரையினை பலப்படுத்திட வேண்டும்.
- மரக்காணம் பேருந்து நிலையத்தில் இரண்டு பெரிய காய்ந்த மரங்கள் உள்ளது. அதனை அகற்றிட வேண்டும்.
- வன்னிப்பேர் கிராமத்தில் உள்ள ஏங்கூர் ஏரி, ஊமைப்பேர் ஏரிகள் ஆழப்படுத்தப்படல் வேண்டும்.

**கள்ளக்குறிச்சி வட்டம்**

- கள்ளக்குறிச்சி மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளை 30.09.2016 அன்று அனைத்து துறைசார்ந்த மண்டல குழு உறுப்பினர்களுடன் நேரில் ஆய்வு செய்யப்பட்டது என கள்ளக்குறிச்சி வருவாய் கோட்டாட்சியரால் ஆய்வுக்கூட்டத்தின் போது தெரிவிக்கப்பட்டது.
- ஏமப்பேர் துணை வாய்க்காலில் உள்ள நீர்ப்பிடிப்பினை சரிசெய்திடல் வேண்டும்.
- கொங்கராயபாளையம் கிராமத்தில் அணைக்கட்டு கட்ட 15 லட்சம் மதிப்பீடு நிர்ணயம் செய்யப்பட்டு, மதிப்பீட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என கூட்டத்தின் போது தெரிவிக்கப்பட்டது.
- வேளாங்குறிச்சி துணை வாய்க்காலில் உள்ள மூங்கில் புதர்களை அகற்றிட வேண்டும்.

**சின்னசேலம் வட்டம்**

- தெங்கியாநத்தம் ஏரியில் உள்ள பாலத்தின் அடியில் நீர்தேக்கம் உள்ளது. நீரோட்டம் மணல் மூடி தடைபட்டுள்ளது. மேலும், பாலம் விரிசல் அடைந்துள்ளது.
- சின்னசேலம் (தெற்கு) கிராமத்தில் 2 காய்ந்த புளியமரங்கள் நெடுஞ்சாலையின் ஓரத்தில் உள்ளதை அகற்றிட வேண்டும்.
- மாதவச்சேரி கிராமத்தில் உள்ள கோமுகி ஆற்றில் குப்பைகள் கொட்டப்பட்டுள்ளது.

- காவடிப்பட்டு ஏரியின் கரை தாழ்வாகவும், பழுதடைந்த நிலையும் உள்ளதை சரிசெய்து, பலப்படுத்திட வேண்டும்.
- ஏர்வாய்ப்பட்டிணம் ஏரியின் மதகு உடைப்பு ஏற்பட்டுள்ளது. அதனை சீரமைக்க வேண்டும்.
- கரடிசித்தூர் கோடி ஏரிக்கரையை உயர்த்தப்பட வேண்டும்.
- வெள்ளிமலை பேருந்து நிலையம் அருகில் உள்ள ஓடையினை அகலப்படுத்திட வேண்டும்.
- வி.கிருஷ்ணாபுரம் கோடி வாய்க்காலை ஆழப்படுத்திட வேண்டும்.
- நைனார்பாளையம் ஏரியின் வாய்க்காலை ஆழப்படுத்திடல் வேண்டும்.
- தென்சிறுவளூர் கிராமத்தில் உள்ள வரத்து வாய்க்காலினை ஆழப்படுத்திடல் வேண்டும்.
- சின்னசேலம் வட்டத்தில் முன்னேற்பாடுகள் செய்திட வேண்டிய அதிகஅளவில் பணிகள் உள்ளது. இப்பணிகளை 04 நாட்களுக்கு முடிவு செய்திட வேண்டும் என கூட்டத்தின்போது சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

**<u>சங்கராபுரம் வட்டம்</u>**

- கோமுகி அணை கட்டு ஆலத்தூர் கிராமத்தின் கரையினை பலப்படுத்திட வேண்டும். மேலும், அணைக்கட்டு விரிசலினை சரிசெய்திடல் வேண்டும்.
- புதுப்பாலப்பட்டு கிராமத்தில் கொசப்பாளையம் ஏரி வாய்க்காலில் பாதையாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி பாதையினை அகற்றம் செய்து, வாய்க்காலினை தூர்வாரிட தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

**<u>திருக்கோயிலூர் வட்டம்</u>**

- மேலந்தல் கிராமத்தில் உள்ள வாய்க்காலினை ஆழப்படுத்திட வேண்டும்.
- காந்திக்குப்பம் கிராமத்தில் அரசு நீர்நிலை புறம்போக்கு பகுதியில் 19 வீடுகள் மூலம் ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். மேற்படி ஆக்கிரமிப்பினை அகற்றி, ஆக்கிரமிப்புதாரர்களுக்கு மாற்று இடம் வழங்கிட ஏற்பாடுகள் செய்திட வேண்டுமென கூட்டத்தின்போது அறிவுறுத்தப்பட்டது.

- சித்தலிங்கமடம் கிராமத்தில் உள்ள ஏரியின் கரைகளை பலப்படுத்திட வேண்டும்.
- வடமாம்பாக்கம் கிராமத்தில் உள்ள ஏரியினை ஆழப்படுத்தி, அதன் கரைகளை பலப்படுத்திட வேண்டும்.
- மணலூர்பேட்டை சித்தப்பட்டு ஏரியினை ஆழப்படுத்தி, அதன் கரைகளை பலப்படுத்திட வேண்டும்.
- திருநாவலூர் வட்டாரத்தில் ஒல்லியம்பாளையம் ஏரியின் கரைகளை பலப்படுத்திட வேண்டும்.
- பின்னல்வாடி கிராம ஏரியின் மதகு பழுதடைந்து உள்ளது. அதனை சரிசெய்திட வேண்டும்.
- வை.பாளையம் கிராமத்தில் உள்ள வாய்க்காலினை தூர் வாரிட வேண்டும்.
- உடையாந்தாங்கல் கிராம வாய்க்கால் அடைப்பு ஏற்பட்டுள்ளது. அதனை ஆழப்படுத்தி புதுப்பிக்கப்படல் வேண்டும்.
- மணலூர்பேட்டை நரியன ஓடையில் உள்ள மேம்பாலம் பலப்படுத்திடல் வேண்டும்.
- சேந்தநாடு கிராமத்தில் நெடுஞ்சாலை 15 கி.மீ. தொலைவிற்கு சாலை துண்டிக்கப்பட்டுள்ளது. மேலும், தரைபாலம் பழுதடைந்துள்ளது. இதனை சரிசெய்திடல் வேண்டும்.

**<u>கண்டாச்சிபுரம் வட்டம்</u>**

- திருமலைப்பேர் ஊராட்சியில் உள்ள ஏரியின் மதகு பழுதடைந்து உள்ளதை சீரமைக்கப்படல் வேண்டும்.
- ஏமப்பேர் தரைபாலம் உடைப்பு ஏற்பட்டுள்ளதை சரிசெய்திட வேண்டும்.
- அரகண்டநல்லூர் தேவனூர் ஏரியில் உள்ள சிறுபாலம் மணல் மூடி உள்ளது. அதனை சரிசெய்திட வேண்டும்.
- சென்னகுணம் கிராமத்தில் உள்ள கண்மாய் வாய்க்கால் தூர்வாரிட வேண்டும். அதேபோல் வீரங்கியூர் வாய்க்கால் தூர்வாரப்படல் வேண்டும்.
- ஆற்காடு கிராமத்தில் உள்ள பொதுப்பணித்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள ஏரியினை பலப்படுத்திட வேண்டும்.

- அருளவாடி வீரசோழபுரம் ஆகிய கிராமங்களில் அரசு நீர்நிலை புறம்போக்குகளில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆக்கிரமிப்புகளை அகற்றம் செய்து 3 நாட்களுக்குள் அறிக்கையினை கொடுத்துக்கொள்ள கேட்டுக்கொள்ளப்பட்டது.

**<u>தீயணைப்புத் துறை:</u>**

- வானூர், விழுப்புரம், திண்டிவனம் ஆகிய வட்டங்கள் Vulnerable உள்ளவை என்பதால், இவ்வட்டங்களில் முன்னெச்சரிக்கை பணிகள் சீரிய முறையில் செயல்படுத்திட வேண்டும்.
- நன்கு நீச்சல் தெரிந்த மீனவர்கள் 10 நபர்களை விசைப்படகுகளுடன் தெரிவு செய்து, அவர்களை தீயணைப்பு மற்றும் மீட்பு குழுவினருடன் இணைந்து மீட்பு பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு, மேற்படி 10 மீனவர்கள் தெரிவு செய்திட மீன்வளத் துறை, உதவி இயக்குநருக்கு கூட்டத்தின்போது அறிவுறுத்தப்பட்டது.
- மேலும், வெள்ளப்பெருக்கு அதிகமாக ஏற்படும் இடங்களில் விசைப்படகுகளை நிறுத்திட வேண்டும் எனவும், மேற்படி விசைப்படகுகளின் விவரங்களை அளித்திட வேண்டும் எனவும் மீன்வளத் துறையினருக்கு கூட்டத்தின்போது அறிவுறுத்தப்பட்டது.

**<u>மருத்துவத் துறை:</u>**

- Vulnerable வட்டங்களான திண்டிவனம், மரக்காணம், வானூர், உளுந்தூர்பேட்டை ஆகிய இடங்களில் மருத்துவக்குழு அவசர ஊர்தியுடன் தயார் நிலையில் இருக்க வேண்டும். மேலும், நடமாடும் மருத்துவ குழு இரண்டு வட்டங்களுக்கு ஒரு குழு என்ற நிலையில் தயாராக இருத்தல் வேண்டும்.
- அவசர மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்துகள் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

**<u>பொது</u>**

- ➢ சீரமைப்பு பணிகள் மற்றும் முன்னேற்பாடு பணிகளை துவங்குவதற்கு முன் பழைய நிலை, பணி நடைபெறும் நிலை, பணி முடிவடைந்த நிலை என மூன்று கட்டங்களாக புகைப்படங்கள் எடுக்கப்படல் வேண்டும்.

- அந்தந்த வட்டங்களில் நியமிக்கப்பட்டுள்ள மண்டல குழுக்களில் உள்ள அனைத்து துறை வாரியான உறுப்பினர்களும் கடந்த ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் ஆய்வு, அதற்குண்டான முன்னேற்பாடு பணிகளை மேற்கொண்டு, அதற்கான அறிக்கையினை மாவட்ட ஆட்சியர் அவர்களின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களிடம் கொடுத்துக்கொள்ள வேண்டியது.
- Vulnerable பகுதிகளை நேரில் ஆய்வு மேற்கொண்ட விவரம், முன்னேற்பாடு பணிகளை தொடங்கிய விவரம், பணிகள் முடிவு செய்த விவரம் என ஒவ்வொரு கிராமம் வாரியாக அறிக்கையினை தயார் செய்து சம்பந்தப்பட்ட மண்டல அலுவலர்களிடம் கொடுத்துக்கொள்ள வேண்டியது.
- மீட்பு பணிக்காக மீனவ கிராமத்தைச் சேர்ந்த 10 உள்ளூர் நபர்கள் நன்கு நீச்சல் மற்றும் மரம் ஏறுதல் தெரிந்தவர்களை தேர்வு செய்து தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.
- பாம்பு பிடிப்பவர்கள் குறித்த பெயர் மற்றும் கைப்பேசி அடங்கிய பட்டியலை மாவட்ட அளவில் 1 நபரும், கோட்ட அளவில் 1 நபரும், வட்ட அளவில் 1 நபரும் தயார் நிலையில் இருத்தல் வேண்டும்.
- மாற்று போக்குவரத்து பாதையினை தேர்வு செய்து தயார் நிலையில் இருத்தல் வேண்டும்.
- மண்டல அலுவலர்களின் குழுக்கள் மேற்கொண்டு வரும் பணிகளை துறை வாரியாக அவ்வப்போது விழுப்புரம் மாவட்ட இணையதளத்தில் புகைப்பட ஆதாரத்துடனும், பணி நடைபெற்ற தேதியினை குறிப்பிட்டு பதிவேற்றம் செய்து வரவேண்டும்.
- அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்களும் தங்களது எல்லைக்குட்பட்ட ஏரிகளின் மதகுகளின் பழுதுகள் அனைத்தும் சரிசெய்திட வேண்டும். மேலும், கடந்த ஆண்டு ஏற்பட்ட மழையின்போது ஏரிகளில் தற்காலிகமாக பணிகள் மேற்கொள்ளப்பட்டதால் ஏரிகளை பலப்படுத்திட வேண்டும்.
- அனைத்து துறைசார்ந்த அலுவலர்களும் தங்களது பணிகளை முடித்து 4 நாட்களுக்குள் அறிக்கை சமர்பித்திட வேண்டும். மேற்படி முடிக்கப்பட்ட பணிகளை மண்டல குழு உறுப்பினர்கள் நேரில் ஆய்வு செய்து, தங்களது ஆய்வறிக்கையினை சமர்பித்திடல் வேண்டும்.

- நீர்த்தேக்கம் உள்ள பகுதிகளில் விசைப்படகுகள் தயார்நிலையில் வைத்திருக்க வேண்டும். மேலும், தேங்கியுள்ள நீரினை வெளியேற்றிட பம்ப் மோட்டார் வைத்திருக்க வேண்டும். அனைத்து ஏரியின் கரைகளிலும் மணல் மூட்டைகள் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

வடகிழக்கு பருவமழை 2016 தொடர்பாக அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் காலதாமதமின்றி உடனடியாக மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அனைத்து அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டது. இப்பணியில் சுணக்கம் ஏதுமின்றி விரைவாகவும், முழுமையாகவும் பணிகளை முடித்திட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

ஒம்/-இல.சுப்பிரமணியன்
மாவட்ட ஆட்சியர்,
விழுப்புரம்.

பெறுநர்
சம்பந்தப்பட்ட அலுவலர்கள்

நகல்: முதன்மை செயலர்/ வருவாய் நிர்வாக ஆணையர் , பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் துறை, சேப்பாக்கம், சென்னை அவர்களுக்கு தகவலுக்காகப் பணிந்து அனுப்பப்படுகிறது.

நகல்: மாவட்ட ஆட்சியர்/மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் நேர்முக எழுத்தர்கள்